

உ

# சிவயோகம்
# SIVAYOGAM

(Charity Reg No: 1050398 Since: 1995)

## இந்துக் கலாசார மையம்



128, Aurelia Road, Croydon. CRO 3BF. Tel: 020 8767 9881, Fax: 020 8711 5333

## அருள்மிகு இலண்டன் முத்துமாரியம்மன் திருக்கோயில்
## கட்டிட நிதி வேண்டி விண்ணப்பம்

அம்பாள் அடியார்களே,

அன்னைக்கு நிலையான கோயில் அமைய திருவருள் கைகூடியுள்ளது. நமது முத்துமாரியம்மன் திருக்கோயில், இந்துக் கலாசார மையம், 128, Aurelia Road, Croydon. CRO 3BF என்னும் முகவரியில் அபிஷேக பூசைகளுக்கும் மற்றும் தரிசனத்திற்கும் திறந்திருக்கும் என்பதை அறியத் தருகிறோம்.

"ஊர் கூடினால்தான் தேர் இழுக்க முடியம்"

"நாம் ஒன்று கூடினால் ஒரு அழகான ஆலயம் எழுப்ப முடியும்"

நமது தமிழ்மொழியும், கலாசாரமும், பக்தியுடன் கூடும் இடம் கோயில். கோயில் அமைப்பதற்காக கொள்வனவு செய்யப்பட்ட நமது புதிய காணியின் பெறுமதி £20 இலட்சம். புதிய கோயில் அமைப்பதற்கு மதிப்பிடப்பட்ட தொகை £10 இலட்சம். மொத்தம் £30 இலட்சம். தற்பொழுது £5 இலட்சத்தை முற்பணமாகக் கொடுத்து அவ்விடத்தை வாங்குவதற்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. £15 இலட்சத்தை வங்கி மூலம் பெற முயற்சி செய்யப்படுகிறது. கூடுதலாக தேவைப்படும் £10 இலட்சத்தை அம்பாளின் ஆசிப்பெற்ற நீங்கள் கொடுத்து உதவ வேண்டுகிறோம். ஒவ்வொருவரும் தங்களால் அம்பாளுக்காக கொடுக்க கூடிய நன்கொடையை கூடிய விரைவில் தந்து உதவ வேண்டுகிறோம்.

1. வசதி உள்ளவர்கள் தொகையை, பணமாகவோ காசோலையாகவோ, நேரடியாக ஆலயத்தில் கொடுத்து பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளலாம். அல்லது இதற்குரிய வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தலாம்.
2. மற்றவர்கள் வங்கியின் மூலம் மாதாமாதம் கோவில் வங்கிக் கணக்குக்கு வந்து சேரும் வண்ணம் (Bank Standing Order) மூலம் ஒழுங்கு செய்யலாம்.
3. ஒரு சிலர் ஒரு தொகையை முன்கூட்டியே கொடுத்ததுடன் வங்கி கட்டளையின் மூலமாகவும் மாதாமாதம் கொடுக்க முன் வந்துள்ளார்கள்.
4. மூலஸ்தானம் அமைக்கும் செலவை ஒரு அன்பர் உபயமாக செய்ய முன் வந்துள்ளார் அது போல் பரிவார தெய்வங்களின் சன்னிதானங்களையும் உபயமாக செய்ய முன் வருமாறு வேண்டுகிறோம்.
5. ஆலயக் கட்டுமான பணிக்குரிய பொருட்களையோ அல்லது அதற்குரிய தொகையையோ கொடுக்கலாம்.
6. நன்கொடையாகவோ, வட்டி இல்லாக் கடனாகவோ தரக்கூடிய நல்ல உள்ளங்களை அறிமுகம் செய்தும் தங்களது பங்களிப்பை ஆற்றியும் உதவ வேண்டுகிறோம்.
7. உங்களுடைய ஒத்துழைப்பும் பங்களிப்பும் இருக்கும் என்ற நம்பிக்கையுடன் 2017 ஜுன் மாதம் கும்பாபிஷேகம் செய்வதற்கான முயற்சிகளை தொடங்கியுள்ளோம்.

"அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை
பொருள் இல்லார்க்கு இவ்வுலகம் இல்லை"

என்ற வாக்கியத்தின்படி, இல்லை என்ற வார்த்தை நம் வாழ்வில் இனி இல்லாமல் போக தங்களால் இயன்ற நன்கொடை அளித்து அன்னையின் திருவருளைப் பெற வேண்டுகிறோம். உங்களுக்கும் உங்கள் குடும்பத்தினருக்கும் அம்பிகையின் திருவருள் கிடைக்கப் பிராத்திக்கின்றோம்.

இங்ஙனம்

**அறங்காவலர்கள்**

| | | |
|---|---|---|
| Account Title | : | SIVAYOGAM – MUTHTHUMARIAMMAN |
| Account No | : | 03215997 Sort Code : 20 21 80 |
| Name of Bank | : | BARCLAYSBANK PLC, CLAPHAM COMMON 2 |
| Address | : | LEICESTERSHIRE, LE87 2BB |



உ

# சிவயோகம்
# SIVAYOGAM

(Charity Reg No: 1050398 Since: 1995)

## இந்துக் கலாசார மையம்

128, Aurelia Road, Croydon. CRO 3BF. Tel: 020 8767 9881, Fax: 020 8711 5333



## அருள்மிகு இலண்டன் முத்துமாரி அம்மன் திருக்கோயில்

### திருக்கோயில் திறந்திருக்கும் நேரம் / TEMPLE OPENING TIMES

08:00 AM to 01:30 PM

04:30 PM to 09:00 PM

செவ்வாய்க் கிழமைகளில் மட்டும் 08:00 AM to 09:00 PM (முழுநாளும் திறந்திருக்கும்)

### பூசை நேரங்கள் - POOJA TIMES

| | | | |
|---|---|---|---|
| காலை | 08.15 | : | லலிதா சகஸ்ரநாம பாராயணம். |
| காலை | 09.00 | : | காலைப்பூசை / Morning Pooja |
| பகல் | 12.00 | : | பகற்பூசை / Afternoon Pooja |
| இரவு | 07.30 | : | இரவுப்பூசை / Evening Pooja |
| இரவு | 09.00 | : | அர்த்தசாமப்பூசை / Arthajaama Pooja |

### மாதாந்த விசேட தினங்கள்

- பூர்வபஷ சதுர்த்தி தினங்களில் சக்தி விநாயகப் பெருமானுக்கு மாலை 6 மணிக்குச் சிறப்பு அபிஷேகமும், சிறப்புப் பூசையைத் தொடர்ந்து சக்தி விநாயகர் மூஷிக வாகனத்தில் திருக்கோயில் வலம் வருதலும் நடைபெறும்.
- சங்கடஹர சதுர்த்தி தினங்களில் அருள்மிகு சுந்தர விநாயகப் பெருமானுக்கு மாலை 6.30 மணிக்கு சிறப்பு அபிஷேகமும் பூசையும் நடைபெறும்.
- ஒவ்வொரு மாதாந்தக் கார்த்திகைத் தினத்தில் முருகப் பெருமானுக்கு மாலை 6.30 மணிக்கு சிறப்பு அபிஷேகமும் பூசையும், சிவஷண்முகப் பெருமானுக்குச் சிறப்புப் பூசையும் நடைபெறும்.
- பௌர்ணமி தினங்களில் காலை 9.30 மணிக்கு கும்ப பூசையுடன் தொடங்கி மூல அம்மனுக்கு 11 வகை திரவியங்களால் சிறப்பு அபிஷேகமும், பகல் 12 மணிக்கு சிறப்பு பூசையும் நடைபெறும்.
- பௌர்ணமி தினங்களில் மாலை 5.30 மணிக்கு எழுந்தருளி அம்மனுக்கும் சிறப்பு அபிஷேகமும், ஸ்ரீ சக்கர பூசையும் பின்னர் சிறப்புப் வசந்த மண்டப பூசையும் நடைபெற்று அம்மன் தங்கரதத்தில் திருக்கோயில் பவனியும் நடைபெறும்.
- பிரதோஷ தினங்களில் மாலை 5.00 மணிக்கு அருள்மிகு அமிர்தலிங்கேஸ்வரர் மற்றும் நந்திகேஸ்வரர் அபிஷேகமும் பிரதோஷ பூசையும் நடைபெறும்.
- பூர்வபஷ ஏகாதசி தினங்களில் இரவு 6.30 மணிக்கு அருள்மிகு குருவாயூரப்பனுக்குச் சிறப்பு அபிஷேகமும் பூசையும் நடைபெறும்.
- ஆங்கில மாத கடைசி ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6.30 மணிக்கு அருள்மிகு ஞான வைரவருக்கு சிறப்பு அபிஷேகமும் பூசையும் நடைபெறும்.
- செவ்வாய்க் கிழமைகளில் ராகுகால நேரத்தில் துர்கை அம்மனுக்கு அபிஷேகமும் பூசையும் நடைபெறும்.

பக்தப் பெருமக்கள் அனைவரும் கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாக விளங்கிவரும் ஆயிரம் கண்ணுடையாள் இலண்டன் முத்துமாரியம்மனைத் தரிசித்து எல்லா வளங்களும் பெற்று இன்பமாக வாழப் பிராத்திக்கின்றோம்.

Designed and Printed by: RS Printers - 020 8782 3844 / 0776 522 4337